ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2355/29 - 2023 ඔක්තෝබර් මස 25 වැනි බදාදා - 2023.10.25
2355/29 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் இலக்கம் 30ஏ, மலலசேக்கர மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ளதும் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அது ஏற்றங்கீகரிக்கப்பட்டதுமான, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகம் (ஐசிஏஎஸ்எல்) தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய 2341/08 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "வியாபார பகுப்பாய்வியலில் முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

1A - PG 6511 — 286 (2023/10)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமானது, குறைந்தபட்சம் 60 திறமைச் சித்திகளுடன் (SLQF மட்டம் 10) வியாபார நிர்வாக முதுமாணி தொடர்பில் (கற்கைநெறி வேலை மற்றும் ஆராய்ச்சிக்கூறுடன்) இதற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு/ கீழ்ப்பிரிவு) ஒன்றுடனான சிறப்பு இளமாணி பட்டத்தைக் கொண்ட குறைந்தபட்ச அனுமதித் தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் சிறப்பு இளமாணிப் பட்டம் ஒன்றையும் மற்றும் குறைந்தபட்சம் ஒரு வருட (01) பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்தையும் கொண்ட குறைந்தபட்ச அனுமதித் தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு/ கீழ்ப்பிரிவு) இல் இளமாணி பட்டத்தைக் கொண்ட குறைந்தபட்ச அனுமதித் தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட (வர்த்தகம், பொருளியல், பொது நிருவாகம் அல்லது பொறியியல் முகாமைத்துவம் உட்பட) ஏதேனும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் ஒன்றையும் அத்துடன் ஏதேனும் வியாபார அல்லது முகாமைத்துவம் தொடர்புபட்ட கற்கைநெறியில் ஆகக்குறைந்தது பட்டப்பின் திப்புளோமாவையும் கொண்ட குறைந்தபட்ச அனுமதித் தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் ஒன்றையும் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு வருட (02) பட்டப்பின் தகைமை வேலை அனுபவத்தையும் கொண்ட குறைந்தபட்ச அனுமதித் தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ஊ) குறைந்தபட்சம் இரண்டு வருட (02) வேலை அனுபவத்துடன் பின்வரும் உயர் தொழில் தகைமைகளில் ஒன்றைக் கொண்ட உறுப்பினர் ; அல்லது

I. பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகம் (சிஏ இலங்கை)

II. பட்டயம் பெற்ற முகாமைக் கணக்காளர்கள் நிறுவகம் (சிஐஎம்ஏ)

III. பட்டயம் பெற்ற மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்கள் கழகம் (ஏசிசிஏ)

IV. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (எஸ்எல்ஐஎம்)

V. இலங்கை பட்டயம் பெற்ற வங்கியாளர்கள் நிறுவகம் (ஏஐபி)

VI. ஐக்கிய இராச்சியம் பட்டயம் பெற்ற சந்தைப்படுத்தல் நிறுவகம் (சிஐஎம்)

VII. ஐக்கிய இராச்சியம் பட்டயம் பெற்ற வங்கியாளர்கள் நிறுவகம் (ஏசிஐபி)

VIII. பட்டயம் பெற்ற ஆளணி முகாமைத்துவ நிறுவகம் (சிஐபிஎம்)

IX. பட்டயம் பெற்ற செயலாளர்கள் மற்றும் நிருவாகிகள் நிறுவகம்

(எ) குறைந்தபட்சம் இரண்டு வருட (02) வேலை அனுபவத்துடனான பின்வரும் உயர் தொழில் தகைமைகளில் ஒன்று :

I. இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்தினால் (SLIATE) வழங்கப்படும் கணக்கிணலில் உயர் தேசிய திப்புளோமா (HNDA) நான்கு வருட கற்கைநெறி அல்லது வர்த்தகத்தில் உயர் தேசிய திப்புளோமா (HNDC) நான்கு வருட கற்கைநெறி

II. சட்டத்தரணி

2. இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமானது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து வருட (5) மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை** II

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பட்ட நிகழ்ச்சித்திட்டம்* | *பட்டங்களுக்கான சுருக்க குறியீடுகள்* |
| வியாபார நிருவாக முதுமாணி | எம்பிஏ |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, ஒற்றோபர் 16.

EOG 10-0257